# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முறையீட்டு மனு எண்: 407/2016/பேரூ–2

ஆணை எண்: 286/2017

நாள்: 19.12.2017

திரு. ஜெ. ரமேஷ்,
எண். 125, பஜார் தெரு,
சோளிங்கர்,
வேலூர் மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

திரு. A.L. விஜயன்,
முன்னாள் பேரூராட்சி மன்றத்தலைவர்,
சோளிங்கர் பேரூராட்சி, சோளிங்கர்
வேலூர் மாவட்டம். — எதிர் மனுதாரர்

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் திரு. ஜெ. ரமேஷ், சோளிங்கர் என்பவரது 15.06.2012 நாளிட்ட மனு பேரூராட்சிகளின் இயக்குநர், அவர்களது கடிதம் ந.க.எண்.8966/2012/இ2 நாள்:02.05.2016 உடன் இணைக்கப்பட்டு உரிய விசாரணை மற்றும் நடவடிக்கைக்காக 12.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. மேற்படி மனு, முறையீட்டு மனு எண்.407/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு தொடர்பாக உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் நடத்தப்பட்டும், வாக்குமூலங்கள் பெறப்பட்டும் உரிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:–

முறையீட்டு மனுதாரரது மனுவில் சோளிங்கர் பேரூராட்சியின் முன்னாள் தலைவர் திரு. A.L. விஜயன் அவரது சகோதரர் மற்றும் சிலருடன் சேர்ந்து பேரூராட்சியில் ஊங்கரம் செய்யப்பட்ட மனைகளின் அளவுகளை மாற்றியும், வரைபடத்தை மாற்றியும், பேரூராட்சிக்கு தானமாக வழங்கிய இடத்தை விற்றுவிட்டதாகவும் இதைப் போல A.N.S. நகர் மனைப் பிரிவிலும் முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மோசடி பத்திரப்பதிவு தொடர்பாக அசல் மனு எண்.294/2010ல் இராணிப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள், விதி 2015–ன் விதி 6–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு, ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் உரிய படிவத்தில் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.407/2016/பேரு நாள்:18.05.2016ன் படி முறையீட்டு மனுதாரருக்கு உரிய அறிவிப்பாணை இம்முறைமன்ற நடுவத்தால் அனுப்பப்பட்டது.

மேலும், 6.12.2016 அன்று நேரில் அஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை பதிவு செய்யுமாறு மனுதாரருக்கு அழைப்பாணையும் (எண்.407/2016/பேரு நாள்: 11.11.2016) அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், மனுதாரர் விதிகளின்படி முறையீட்டு மனுவினை நாளதுவரை தாக்கல் செய்யவில்லை. மேலும், மேற்படி விசாரணைக்கும் ஆஜராகவில்லை. ஆனால், மேற்படி அழைப்பாணை மனுதாரர் குறிப்பிட்ட முகவரியில் இல்லை என அஞ்சல் துறையினால் குறிப்பிடப்பட்டு திரும்ப வரப்பெற்றுள்ளது.

இருப்பினும், புகார் மனு தொடர்பாக விளக்க அறிக்கை சமர்ப்பிக்குமாறு சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 28.11.2016 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. மேலும், 30.08.2017 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை அளிக்குமாறு செயல் அலுவலருக்கு 01.08.17 நாளிட்ட முறைமன்ற நடுவ அழைப்பாணையும் அனுப்பப்பட்டது. அதன்படி திரு. ஜெ. அன்பு செல்வம், செயல் அலுவலர் சோளிங்கர் பேரூராட்சி அவர்கள் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு ஆஜராகி தனது விளக்கங்களையும், வாக்குமூலத்தினையும் சமர்ப்பித்துள்ளார். செயல் அலுவலரது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்ட முகவரியில் முறையீட்டு மனுதாரர் பெயரில் எவரும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளது போன்று எதிர்மனுதாரரான முன்னாள் பேரூராட்சி தலைவரது செயல்பாடுகள் இல்லை எனவும் அவரது உறவினர் எவரும் செயல் அலுவலராக பணிபுரியவில்லை என்றும் செயல் அலுவலரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. ANS நகர் மனைப்பிரிவு அங்கீகாரம் அரசு ஆணைப்படியும் செயல் அலுவலருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் உரிய விதிகளின்படி வரன்முறைபடுத்தப்பட்டுள்ளதெனத் தெரிவித்து 4.8.17 நாளிட்ட அறிக்கையின் நகலொன்றினை சமர்ப்பித்தார்.

மேலும் இப்பொருள் தொடர்பாக விசாரணையின்போது கோரப்பட்ட, பொதுப்பயன்பாட்டிற்கான நில ஒதுக்கீடு தானம் பெறப்பட்டமை, மனைப்பிரிவு அங்கீகாரம் போன்ற பிற விவரங்களை ஆவணங்களைப் பரிசீலித்தும், தல ஆய்வு மேற்கொண்டும் சமர்ப்பிப்பதாக தெரிவித்து கால அவகாசம்

வழங்கிடுமாறு செயல் அலுவலரால் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி விவரங்களை தாக்கல் செய்திட உரிய கால அவகாசம் வழங்கி முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது.

செயல் அலுவலரது 04.08.2017 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன;

i. சோளிங்கர் பேரூராட்சி வார்டு எண்.10ல் ANS நகர் அமைக்க பேரூராட்சிமன்ற தீர்மான எண்.26 நாள்: 08.05.2002ல் மனைப் பிரிவு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ii. பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய 10% இடத்திற்கான கிரயத் தொகை ரூ.2,54,435/– 24.10.2001ல் செலுத்தப்பட்டுள்ளது. இதனையும் சாலைகளை தானமாக பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டதையும் ஏற்று மனைப்பிரிவு செய்ய பேரூராட்சி மன்றத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து வரப்பெற்ற செயல் அலுவலரது 01.09.2017 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுவிலுள்ள முகவரியில் மனுதாரர் பெயரில் எவரும் வசிக்கவில்லை எனவும் முகவரி உண்மைக்கு புறம்பானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள ANS நகர் மனைப்பிரிவு குறித்து 08.05.2002ல் பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்கு பின்னர் மறு திருத்தங்கள் எதும் செய்யப்படவில்லை எனவும் மேற்படி மனைப் பிரிவில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 09.09.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி எதிர்மனுதாரரான திரு. A.L. விஜயன் முன்னாள் பேரூராட்சி தலைவர் 29.11.2017 அன்று நேரில் ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை அளிக்குமாறு ஆணையிடப்பட்டது. அதன்படி விசாரணைக்கு ஆஜரான எதிர்மனுதாரர், முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள மனுதாரர் திரு. ஜெ. ரமேஷ் என்பவர் யார் என்று தனக்குத் தெரியாதெனவும், புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் வரைபடங்களில் அங்கீகரிக்கப்பட்ட மனை அளவுகளில் எந்தவிதமான மாற்றங்களும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். ANS நகர் மனைப் பிரிவு திரு. வெங்கடேசன் என்பவரது வகையறாக்களிடம் இருந்ததெனவும், அவர்கள் பேரூராட்சிக்கு 10 சதவீத பொது ஒதுக்கீடு நிலத்திற்கான கிரயத் தொகையினை வழிகாட்டு மதிப்பீட்டின்படி பேரூராட்சி மன்ற அனுமதியின்கீழ் செலுத்தியுள்ளரெனவும் தெரிவித்தார். அவர்களிடமிருந்து தாங்கள் இரண்டாவது கிரையம் பெற்றுள்ளதாகவும் பேரூராட்சியில் அங்கீகாரம் கோரி வைக்கப்பட்டு பொருள் நிராகரிக்கப்பட்டதாக புகாரில் சொல்வது சரியானதல்ல எனவும் தெரிவித்தார். மேலும், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள நீதிமன்ற வழக்கு அசல் மனு எண்.294/2010 ஏற்கெனவே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்து தீர்ப்பின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார்.

தான் பேரூராட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதை விரும்பாத சிலர் இது போன்று ஆதாரமற்ற பல புகார் மனுக்களை பல துறைகளுக்கு அனுப்பி உள்ளனரெனவும் அவற்றில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் எதிர்மனுதாரர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்."

பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கைகள், வாக்குமூலம், எதிர்மனுதாரரது வாக்குமூலங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், உரிய அறிவிப்பாணைக்குப் பின்னரும் விதிகளின்படி முறையாக முறையீட்டு (நீதிமன்ற கட்டண வில்லையுடன்) தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், நேரடி விசாரணைக்கு ஆஜராகாத நிலையினையும், புகாரில் குறிப்பிட்டுள்ள முகவரியில் முறையீட்டு மனுதாரர் பெயரில் எவரும் இல்லை என்பதனையும் கருதி இம்முறையீட்டு மனுவினை முகாந்திரமற்ற மற்றும் நிருபணமாகாத மனுவாக தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. ஜெ. ரமேஷ்,
   எண். 125, பஜார் தெரு,
   சோளிங்கர்,
   வேலூர் மாவட்டம்.

2. திரு. A.L. விஜயன்,
   முன்னாள் பேரூராட்சி மன்றத்தலைவர்,
   சோளிங்கர் பேரூராட்சி, சோளிங்கர்
   வேலூர் மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
   சோளிங்கர் பேரூராட்சி, சோளிங்கர்,
   வேலூர் மாவட்டம்.

நகல்

பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின்இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 600 108.